


மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரை பிற்படுத்தப்பட்ட நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். உடன் நிவேதா எம்.முருகன், சுதா, பூங்கொடி, குத்தாலம் க. அன்பழகன், பி.எம். ஸ்ரீதர், ஜி.என்.ரவி, மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி மகா.அலெக்சாண்டர், குண்டாமணி (எ )என்.செல்வராஜ்ஒன்றிய கழக செயலாளர் மூவலூர் எம்.மூர்த்தி, ப. முருகமணி, ஏ.ஜி.ஜெ. பிரபாகர் எம். அப்துல் மாலிக் மற்றும் பலர் உள்ளனர்.

### முதல்வரால் திறக்கப்பட்ட நெரூர் - உன்னியூர் உயர்மட்ட பாலத்தில்

# புதிய வழித் தட பேருந்துகள் சேவை!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.துவக்கி வைத்து பேச்சு!



கரூர், மார்ச் 4-

காவிரி ஆற்றின் குறுக்கே நெரூர் உன்னியூர் உயர் மட்ட பாலத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்ததை தொடர்ந்து புதிய வழித்தட பேருந்துகளை புதிய பாலத்தில் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்து பேசினார்.

கரூர் மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை கரூர் மாவட்டம் நெரூர் திருச்சி மாவட்டம் உன்னியூர் இடையே, காவிரி ஆற்றின் குறுக்கே, உயர்மட்ட பாலம் கட்ட வேண்டும் என்பது. உயர் மட்ட பாடம் கட்டும் பணிகள் நிறைவுபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக பாலத்தை திறந்து வைத்தார்.

கரூர் மாவட்டத்தில் இருந்து திருச்சி மாவட்டம் உன்னியூர், காட்டுப்புத்தூர், அவ்வழியே திருச்சி, துறையூர், பெரம்பலூர் செல்வதற்கு பல கிலோமீட்டர் சுற்றி வளைத்து மக்கள் சென்று வந்த சிரமம் நீங்கியது.

இதனை அடுத்து கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி, பொது மக்களுடன் பாலத்தில் சென்று, புதிய பாலத்தில் புதிய வழித்தட பேருந்துகளை துவக்கி வைத்து பேருந்தில் சென்று வந்தார். கரூர் மாவட்டம் நெரூர் மற்றும் திருச்சி மாவட்டம் உன்னியூர் இடையே காவிரியாற்றின் குறுக்கே ரூ. 101.30 கோடி மதிப்பில், சுமார் 1.10 கி.மீட்டர் நீளம், 12.90 மீட்டர் அகலத்துடன், இந்த புதிய உயர் மட்ட பாலம் கட்டப்பட்டுள்ளது.

இணைப்புச் சாலையுடன் சேர்த்து சுமார் 2.25 கி.மீட்டர் நீளமுள்ள இந்த பாலத்தினால், 3540 நிமிட பயண நேரமும், 2530 கி.மீட்டர் பயண தூரமும் மக்களுக்கு மிச்சமாகிறது.

கரூர் மாவட்டம் நெரூரையும், திருச்சி மாவட்டம் உன்னியூரை இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே ரூ 101. 25 கோடி மதிப்பில் கட்டப்பட்ட உயர்மட்ட பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

இதனையடுத்து பொது மக்கள் இரண்டு மாவட்டங்களுக்கும் சென்று வரும் வகையில் பேருந்து சேவையை கொடியசைத்து சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்து பயணம் செய்தார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கரூர் கிழக்கு ஒன்றிய பகுதியில் இருந்து திருச்சிக்கு செல்ல முடியாமல் ஒரு தீவு போல இருந்தது.

50 ஆண்டு கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் புதிய உயர் மட்ட பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். இதனால் கரூர் மற்றும் திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுமட்டுமின்றி, அமராவதி ஆற்றின் குறுக்கே கோயம்பள்ளி மேலப்பாளையம் பாலம் ரூ 15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வந்தது. கடந்த ஆட்சியாளர்கள் நிறைவு செய்யாமல் கிடப்பில் போட்டு விட்டனர். அதன் இணைப்புச் சாலைக்கு கூடுதலாக ரூ 11 கோடி ரூபாய் நிதி வழங்கி தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், அரசு குடியிருப்பு தொடங்கி நெரூர் வரை சாலை விரிவாக்கம் செய்ய ரூ 30 கோடி நிதி, சோமூர் செல்லும் குறுகலான சாலைகள் விரிவாக்கம் செய்வதற்காக ஏற்கனவே ரூ 9 கோடியே 53 லட்சம் நிதி கொடுத்து பணிகள் நடைபெற்று வருகிறது.

கூடுதலாக ரூ 10 கோடியே 85 லட்சம் நிதி வழங்கி பதினாறு கால் மண்டபம் தொடங்கி மேலப்பாளையம், கோயம்பள்ளி, செல்லிபாளையம் வழியாக சோமூர், திருமக்கூடலூர் வரை செல்லக்கூடிய சாலைக்கு ரூ 20 கோடியே 30 லட்சம் நிதி என முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

இது மக்களுக்கான அரசு, இந்த பகுதியின் வளர்ச்சிக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடிய அரசு, மு.க.ஸ்டாலின் அவர்களுடைய அரசு என்பதை இப்பகுதி மக்கள் நெஞ்சார வாழ்த்தி கொண்டு இருக்கிறார்கள்.

இரண்டரை லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு, நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ் புதல்வன், இல்லம் தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48, மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம் என எண்ணற்ற அடுக்கடுக்கான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சுதந்திரம் பெற்றது முதல் யாரும் வழங்காத அளவுக்கு கரூர் மாவட்டத்திற்கு மட்டும் ரூ 5 ஆயிரம் கோடி அளவிற்கான திட்டங்களை வழங்கி உள்ளதை நாமெல்லாம் நினைத்து பார்க்க வேண்டும்.

எத்தனையோ பேர் வரலாம் போகலாம் வெற்று விளம்பரங்களை செய்யலாம். வெற்று வாக்குறுதிகளை கொடுக்கலாம். சில பேர் கவர்ச்சிக்காக அரசியலில் வந்து எதையாவது பேசலாம் . ஆனால் நம்மில் ஒருவராக நமக்கான ஒருவராக பணியாற்றக்கூடிய தேவையான திட்டங்களை தரக்கூடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பதை மக்கள் மனதில் வைத்து, வரக்கூடிய காலங்களில் உறுதுணையாக இருந்திட வேண்டும். இன்னும் ஏராளமான திட்டங்கள் மீண்டும் திராவிட மாடல் அரசு 2.0 அமையும் போது வரும்.

அப்போது கரூர் கிழக்கு பகுதியில் ஒரு புதிய தொழிற்சாலை கொண்டுவரப்பட்டு வேலை வாய்ப்பு வழங்கப்படும். இந்த நாள் ஒரு பொன்னாள். இந்த மார்க்கத்தில் விரைவில் சென்னைக்கு விரைவு பேருந்து சேவை தொடங்கும் என்றார்.

நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காடுவெட்டி தியாகராஜன், கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் விமல் ராஜ், முன்னாள் எம்எல்ஏ காமராஜ், வக்கீல் விஜயகுமார் முத்துக்குமாரசாமி, பூவை.ரமேஷ் பாபு மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு விருந்து வழங்கப்பட்டது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டம், இரத்தனபுரி பகுதி கழக பொறுப்பாளர் கோவை லோகு தலைமையில் 47 வது வட்ட கழக பொறுப்பாளர் செ.பூபாலன் ஏற்பாட்டில் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 1,000 பள்ளி மாணவ – மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் வழங்கினார். இதில் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மத்திய மண்டலகுழுத் தலைவர் மீனா லோகு, பொதுக்குழு உறுப்பினர் சரஸ்வதி, மாமன்ற உறுப்பினர்கள் வைரமுருகன், ராஜபாண்டி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தனபால், துணை அமைப்பாளர்கள் துரை பிரவீன்குமார், மணிகண்டன், லாரா பிரேம்தேவ், வட்டக் கழக செயலாளர் பி.ஆறுமுகம், கே.விஸ்வநாதன், எஸ்.பாசகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின்

# மாற்றுத்திறனாளிகளின் நலனில் அக்கறை கொண்டுள்ளார்!

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற பொதுச் செயலாளர் நா. சண்முகநாதன் அறிக்கை!



புதுக்கோட்டை, மார்ச் 4-

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பேணிக்காப்பதிலும் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பதிலும் எப்போதுமே மிகுந்த அக்கறையுடன் செயல்படுகிறார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

ஆசிரியர், அரசு ஊழியர்களின் பாதுகாவலராக விளங்கிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஊனமுற்றவர்கள் என்ற பெயரை மாற்றுத் திறனாளிகள் என மாற்றிக் காட்டியவர். முதலமைச்சர் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிறார்.

குறிப்பாக அரசு ஊழியர்களுக்கு ஆசிரியர்களுக்கு தகுதித் தேர்வில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பல லட்சக்கணக்கான ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் கனவுகளோடு காத்திருக்கும் தேர்வர்களுக்கும் பலனளிக்கும் வகையில் இனிவரும் ஆசிரியர் தகுதித் தேர்வுகளில் தகுதி மதிப்பெண்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு 55 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகவும், பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய பிரிவினருக்கு 55 சதவீதத்திலிருந்து, 50 சதவீதமாகவும் மாற்றி அரசாணை வெளியிடப்பட்டது.

இதன் மூலம் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நம் முதலமைச்சர் என்றுமே உறுதுணையாக இருப்பார் என்பதையும், பணியில் இருக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

ஆசிரியர் தகுதித் தேர்வு தேவையில்லை என்பது தான் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் நிலைப்பாடு.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்புகளை போக்கும் வகையில் தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு தகுதி தேர்வு தேர்ச்சி மதிப்பெண்ணில் 40% ஆக குறைத்து இருப்பதற்கும் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரிய மன்றத்தின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என தனது செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

### முதல்வர் பிறந்தநாள் : மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில்

# பொள்ளாச்சியில் 500 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## தென்றல் செல்வராஜ் தலைமையில் இரா.ராஜீவ்காந்தி வழங்கினார்!

கோவை,மார்ச் 4-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பாக பொள்ளாச்சி நகர 13வது வார்டு பொதுமக்கள் 500 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில் கழக சட்டத் திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் பொள்ளாச்சி வடக்கு நகர பொறுப்பாளர் இரா.நவநீதகிருஷ்ணன் , பொள்ளாச்சி தெற்கு நகர பொறுப்பாளர் எம்.அமுதபாரதி, நகர மன்ற துணைத் தலைவர் எஸ்.கவுதமன், வட்ட செயலாளர் பூவை செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நகர மன்ற உறுப்பினர் மணிமாலா தென்றல் வரவேற்புரையில் நடைபெற்றது.

கழக மாணவரணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாநில மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், நகர மன்ற தலைவர் ந.சியாமளா, தலைமை பொதுக் குழு உறுப்பினர் ஆச்சிபட்டி பாலகிருஷ்ணன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் டி.மருதராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் பிரபாகரன், நகர துணைச் செயலாளர்கள் ஆர்.நாச்சிமுத்து, பாத்திமா அக்பர், மாவட்ட பிரதிநிதி இரும்பு சுப்பிரமணியம், நகரமன்ற உறுப்பினர்கள் பி.ஏ.செந்தில் குமார், முருகானந்தம், முன்னாள் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, கோவை மாநகர மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மசூத் , மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் எம். வி.ஜெயக்குமார், வட்டத் பிரதிநிதி கரியாம்பட்டி செல்வராஜ், உதயநிதி ஸ்டாலின் ரசிகர் நற்பணி மன்றம் மாவட்ட துணைச் செயலாளர் பிரதீப், தெற்கு நகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சரவணன், KVB.விஜயகுமார், பேங்க் தங்கராஜ், முனிசிபாலிட்டி, சண்முக சுந்தரம், நகர இளைஞரணி அமைப்பாளர்கள் வி.யுவராஜ், முத்துக்குமார், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், சபரி முத்துவீரன், தலைமை கழக இளம் பேச்சாளர் பூங்கொடி, நகர தகவல் தொழில் நுட்ப அணி விக்னேஷ் பிரபு, முன்னாள் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பவின், மனோஜ், சார்பு துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், தாஸ் பிரபு, வட்டப் பிரதிநிதி லேத் சுப்பிரமணியம் , முன்னாள் நகர மாணவரணி துணை அமைப்பாளர் கௌதம் , பாலகேசன், காய்கறி பாலன் , சக்திவேல், அங்குமணி, கணேஷ் , சுரேஷ், எம் பி ஆனந்த் குமார், சிடிசி ஹரி ராஜா, முகேஷ் பாண்டியன், அரவிந்த், சதீஷ் ராஜ், சபரி பாபு , ஹரி முரளி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பாக பொள்ளாச்சி நகர 13வது வார்டு பொதுமக்கள் 500 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் ஏற்பாட்டில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் பொள்ளாச்சி வடக்கு நகர பொறுப்பாளர் இரா.நவநீதகிருஷ்ணன் , பொள்ளாச்சி தெற்கு நகர பொறுப்பாளர் எம்.அமுதபாரதி, நகர மன்ற துணைத் தலைவர் எஸ்.கவுதமன், வட்ட செயலாளர் பூவை செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நகர மன்ற உறுப்பினர் மணிமாலா தென்றல் வரவேற்புரையில் நடைபெற்றது.



திருவாரூர் ஒன்றியம் பின்னவாசல் ஊராட்சியில் நடைபெற்ற 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' ஸ்டாலின் மகளிர் படையினர் வீடுவீடாக மேற்கொண்ட பிரச்சாரத்தில் ஒன்றிய கழக செயலாளரும்,ஒன்றிய முன்னாள் பெருந்தலைவருமாகிய புலிவலம் ஏ.தேவா பங்கேற்றார். ஸ்டாலின் மகளிர் படையினர் மற்றும் மகளிரணியினர் பங்கேற்றனர்.



நாகை மாவட்டம் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் பட்டமங்கலம் ஊராட்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய செயலாளருமான ப.கோவிந்தராஜன் ஆகியோர் வழிகாட்டுதலின்படி வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஸ்டாலின் மகளிர் படையினர் வீடு வீடாக பரப்புரை செய்தனர்.